# விவேகானந்த கல்லூரி

**பல்கலைக்கழக மானியக்குழுவால் ஆற்றல்சார் கல்லூரி அந்தஸ்து வழங்கப்பெற்றுள்ளது**

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட, தன்னாட்சி பெற்ற குருகுல வாழ்க்கைப் பயிற்சி நிறுவனம்

தேசியதர நிர்ணயக்குழுவால் (NAAC) மறுமதிப்பீடு செய்யப்பெற்று 'A+' கிரேடு (CGPA 3.33 out of 4.00) தகுதி வழங்கப்பெற்றுள்ளது

DBT நட்சத்திர கல்லூரி திட்டத்திற்கு நிதியளிக்கப்பெற்றது

(மேலாண்மை: ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, திருச்சிமாவட்டம்)

திருவேடகம் மேற்கு - 625 234, மதுரை மாவட்டம், தமிழ்நாடு.

இணையதள முகவரி: www.vivekanandacollege.ac.in தொலைபேசி எண்கள்: 04543-258234, 7540060257


# குருகுலச் சுடர்


**தீபம் - 9 சுடர் - 2 ஜூலை 2025**






# விவேகானந்த கல்லூரி

**பல்கலைக்கழக மானியக்குழுவால் ஆற்றல்சார் கல்லூரி அந்தஸ்து வழங்கப்பெற்றுள்ளது**
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட, தன்னாட்சி பெற்ற குருகுல வாழ்க்கைப் பயிற்சி நிறுவனம்
தேசியதர நிர்ணயக்குழுவால் (NAAC) மறுமதிப்பீடு செய்யப்பெற்று 'A+' கிரேடு (CGPA 3.33 out of 4.00) தகுதி வழங்கப்பெற்றுள்ளது
DBT நட்சத்திர கல்லூரி திட்டத்திற்கு நிதியளிக்கப்பெற்றது
(மேலாண்மை: ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, திருச்சிமாவட்டம்)
திருவேடகம் மேற்கு - 625 234, மதுரை மாவட்டம், தமிழ்நாடு.
இணையதள முகவரி: www.vivekanandacollege.ac.in தொலைபேசி எண்கள்: 04543-258234, 7540060257

**தீபம் - 9 சுடர் - 2 ஜூலை 2025**


## கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வுகள்




- ✓ 01.07.2025 அன்று கல்லூரியின் அனைத்து மாணவர்களுக்கும் SWAYAM-NPTEL Local Chapter என்ற தலைப்பில் ஒரு அறிமுக வகுப்பு நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை வேதியியல் உதவிப் பேராசிரியர் முனைவர். க.ராஜ்குமார் ஒருங்கிணைத்தார். கல்லூரி பொறுப்பு முதல்வர் மற்றும் வணிகவியல் இணைப் பேராசிரியருமான முனைவர்.கே.கார்த்திகேயன் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

- ✓ 03.07.2025 அன்று கல்லூரியின் மாலை நேர பிரார்த்தனைக்கு பின்பு கல்லூரியின் முன்னாள் (முதுநிலை கணினி அறிவியல் 2002-2004) மாணவர், அமெரிக்காவில் பணிபுரிந்து வரும் திரு ஜி. வினோத் மாணவர்களுக்கு கல்வி மற்றும் வாழ்க்கை நோக்கங்களை அடையவதற்க்கான ஊக்கவுரையாற்றினார்.






- ✓ 05.07.2025 அன்று கல்லூரியின் SC & ST மையம் ஏற்பாட்டில் கல்லூரியின் அலுவலக இளநிலை உதவியாளர் மற்றும் கல்வி உதவித்தொகை ஒருங்கிணைப்பாளர் திரு. பி. கார்த்திகேயா மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகைக்கு NSP மூலமாக எவ்வாறு விண்ணப்பிப்பது என்று ஒரு நோக்குநிலை வகுப்பு எடுத்தார்.

- ✓ 12.07.2025 அன்று கல்லூரியில் "International Blood Donors Day" கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் இரத்த தானத்தின் அவசியம் மாணவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.
- ✓ 15.07.2025 அன்று கல்லூரியின் முதல்வர் (பொ) முனைவர் கே. கார்த்திகேயன் அவர்களின் தலைமையில் கல்லூரியின் துறை தலைவர்கள் சந்திப்புக் கூட்டம் நடைபெற்றது.
- ✓ 26.07.2025 அன்று கல்லூரியின் NCC, NSS, YRC & RRC ஏற்பாட்டில் சமூக அக்கறை நிகழ்வான் போதைக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.



## தமிழ்த்துறை

- ✓ 10.07.2025 அன்று தமிழ்த் துறை “தமிழும் கீழடி அகழ்வாராய்ச்சியும்” என்ற தலைப்பில் ஏற்பாடு செய்த கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் திருமங்கலம், கப்பலூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கீழடி கரு.முருகேசன் “தமிழும் கீழடி அகழாய்வும்“ என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.




- ✓ பிஷப் அம்புரோஸ் தன்னாட்சிக் கல்லூரி “நவீனத்துவமும் இக்கால இலக்கியமும்“ என்னும் பொருண்மையில் 21.07 2025 முதல் 25.07.2025வரை இணைய வழியில் நிகழ்த்திய ஐந்துநாள் பன்னாட்டு ஆசிரியர் திறன் மேம்பாட்டு நிகழ்வில் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் சு.முத்தையா பங்கேற்றார்.
- ✓ 22.07.2025 அன்று மதுரை தியாகராசர் கல்லூரி, தமிழ்த்துறையின் “தீந்தமிழ் இலக்கிய மன்றம்“ சார்பாக நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு “வாசிப்போம் தமிழை நேசிப்போம்“ என்ற தலைப்பில் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் (பொ), முனைவர் கு.இராமர் சிறப்புரையாற்றினார்.

## ஆங்கிலத்துறை

- ✓ 02.07.2025 அன்று கோவில்பட்டி ஜி. வெங்கடசாமி நாயுடு கல்லூரி வெளியிட்ட Journal of Inventive and Scientific Research Studies இல் கல்லூரியின் ஆங்கிலத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பி. சரவணக்குமார் “Sufferings of Women in Mahasweta Devi’s Bayen and Mother of 1084” என்ற தலைப்பில் எழுதிய ஆய்வுக் கட்டுரை பிரசுரமாகியுள்ளது.
- ✓ 11.07.2025 அன்று கேரளாவின் ஏ.சி.டி அகாடமியால் ஏற்பாடு செய்யப்பட்ட ”மேம்பட்ட கற்பித்தல் திறனுக்கான இலவச ஐ.சி.டி கருவிகள்” என்ற தலைப்பில் ஒரு நாள் தேசிய அளவிலான மின்-பட்டறையில் ஆங்கிலத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பி. சரவணக்குமார் கலந்து கொண்டார்.
- ✓ 16-07-2025 மற்றும் 17-07-2025 ஆகிய தேதிகளில் கேரளாவிலுள்ள ஏ.சி.டி. அகாடமி ஏற்பாடு செய்த “அறிவியல் எழுத்தில் நெறிமுறைகள் மற்றும் கருத்துத் திருட்டு” என்ற தலைப்பில் இரண்டு நாள் தேசிய அளவிலான இணையவழி பயிற்சி பட்டறையில் ஆங்கிலத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பி. சரவணக்குமார் பங்கேற்றார்.
- ✓ 17.07.2025 அன்று ஆங்கிலத் துறையின் குழு விவாத மன்றத்தில் மாணவர்கள் “Advantages and Disadvantages of Caste Based Census” என்ற தலைப்பில் குழு விவாதத்தில் ஈடுபட்டு தங்கள் கருத்துக்களை பகிர்ந்தனர்.




- ✓ 21.07.2025 முதல் 25.07.2025 வரை இலங்கையின் கொழும்பில் உள்ள மனிதநேயம் மற்றும் சமூக அறிவியலுக்கான தேசிய மேம்பட்ட ஆய்வுகள் மையம் மற்றும் பெங்களூரில் உள்ள குளோபெதிக்ஸ் தெற்காசிய மையம் உயர்கல்வியில் ஆராய்ச்சி நெறிமுறைகளை மையமாகக் கொண்டு ஏற்பாடு செய்த ஐந்து நாள் சர்வதேச ஆசிரிய மேம்பாட்டுத் திட்டத்தில் ஆங்கிலத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பி. சரவணக்குமார் பங்கேற்றார்.
- ✓ 25.07.2025 அன்று இந்தியாவின் தமிழ்நாட்டின் மதுரையில், SKRGC அகாடமியுடன் இணைந்து இந்திய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கவுன்சிலால் ஏற்பாடு செய்யப்பட்ட ”நவீன கல்வியியல் நடைமுறைகளுடன் இந்திய அறிவு முறையை கலத்தல்” என்ற தலைப்பில் ஒரு நாள் தேசிய ஆராய்ச்சி பட்டறையில் ஆங்கிலத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பி. சரவணக்குமார் கலந்து கொண்டார்.
- ✓ 23.07.2025 முதல் 29.07.2025 வரை திண்டுக்கல்லில் உள்ள ஜி.டி.என். கல்லூரியின் IQAC உடன் இணைந்து ஏ.சி.டி. அகாடமி மற்றும் பி.ஜி. மற்றும் ஆங்கில ஆராய்ச்சி மையம் ஏற்பாடு செய்த ”எல்லைகளைத் தாண்டிய கதைகள்: பன்மொழி மற்றும் பன்முக கலாச்சார ஆய்வு” என்ற தலைப்பில் ஏழு நாள் தேசிய அளவிலான (மெய்நிகர் பயன்முறை) ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டத்தில் ஆங்கிலத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பி. சரவணக்குமார் பங்கேற்றார்

- ✓ 30.07.2025 அன்று SKRGC அகாடமியால் ஏற்பாடு செய்யப்பட்ட UGC Care List Journals & Scopus குறியீட்டு இதழ்களில் ஆராய்ச்சி கட்டுரை வெளியீடு” என்ற தலைப்பில் நடத்திய ஒரு நாள் கருத்தரங்கில் ஆங்கிலத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பி. சரவணக்குமார் கலந்து கொண்டார்.

## பொருளியல் துறை




- ✓ 01.07.2025 அன்று பொருளியல் துறையில; “Entrepreneurship Training Programme” என்ற தொழில்முனைவு பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரியின் பொருளியல் துறையின் மேனாள் துறைத் தலைவர் முனைவர் பி. பட்டினத்தார் சிறப்பு பயிற்சியாளராக பங்குபெற்று மாணவர்களுக்கு தொழில் தொடங்குதல் மற்றும் மேலாண்மை திறன்கள் குறித்து கலந்துரையாடினார் மேலும் மாணவர்களுக்கு அகர்பத்தி தாயாரித்தல், சாம்பிரானி தயாரித்தல் போன்றவற்றிற்க்கு பயிற்சியளித்தார்.

## வரலாற்றுத்துறை


- ✓ 02.07.2025 அன்று வரலாற்றுத் துறை முதலாமாண்டு மாணவர்களுக்கு “Orientation Programme” நடைபெற்றது. இந்நிகழ்வில் வரலாற்றுத்துரையில் 2025 ஆம் கல்வியாண்டில் சேர்ந்துள்ள புதிய மாணவர்களுக்கு பாடத்திட்டம் மற்றும் கல்வி வளங்கள் குறித்த அறிமுகம் மற்றும் விளக்க வகுப்பு எடுக்கப்பட்டது. இதில் கல்லூரியின் மேனாள் வரலாற்றுத் துறை தலைவர் முனைவர் டி. காளியாப்பன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு ஊக்கவுரையாற்றினார்.
- ✓ 05.07.2025 அன்று வரலாற்றுத் துறையில் “Understanding Our Environment” என்ற விருந்தினர் சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கல்லூரியின் வரலாற்றுத் துறையின் முன்னாள் மாணவர் மற்றும் குற்றாலம், அகல்வாராய்ச்சி அலுவலர் திரு கே. சக்திவேல் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பற்றி மாணவர்களிடம் கலந்துரையாடினார்.
- ✓ 05.07.2025 அன்று வரலாற்றுத்துறையில் சிறப்பு சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் விவேகானந்த கல்லூரி வரலாற்றுத்துறையின் பெருமைமிகு முன்னால் மாணவரும், இயற்க்கை ஆர்வளருமாகிய திரு. ச. குலசேகரன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு “நமது சுற்றுச்சூழலைப் புரிந்துகொள்ளுதல்” என்னும் தலைப்பில் உரையாற்றினார்.




- ✓ 09.07.2025 அன்று கல்லூரியின் வரலாற்றுத் துறை மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் குற்றாலத்தில் உள்ள நாட்டுப்புற கலை அருங்காட்சியகம், குற்றாலநாதர் கோவில், சித்திர சபை மற்றும் திருமலை முருகன் கோவில் ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க மற்றும் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பார்வையிட ஒருநாள் களப்பயணம் சென்று வந்தனர்.



- ✓ 15.07.2025 அன்று வரலாற்றுத் துறை “Maruthai-Mathirai-Madurai” என்ற புகைப்படக் கண்காட்சியை நடத்தியது. இந்நிகழ்வில் மதுரை பிராந்திய பண்பாட்டு அடையாளங்கள் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நிகழ்வில் விவேகானந்த கல்லூரி வரலாற்றுத்துறையின் பெருமைமிகு முன்னால் மாணவரும், மேனாள் இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவருமாகிய முனைவர் ந. நாகேந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு “மருதை-மதிரை-மதுரை: மதுரையின் பெயர்க்காரணம் மற்றும் தோற்றம்” என்னும் தலைப்பில் உரையாற்றினார்.
- ✓ 19.07.2025 மற்றும் 20.07.2025 ஆகிய இரு நாட்கள் வரலாற்றுத்துறை உதவிப்பேராசிரியர்கள் திரு வீ. முருகன் மற்றும் முனைவர் சி. பாண்டீஸ்வரன் ஆகியோர் மதுரை பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையம் நடத்திய தமிழ்நாடு தொல்லியல் கழகத்தின் 33 வது ஆண்டு கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.
- ✓ 29.07.2025 அன்று, வரலாற்றுத்துறையில் சிறப்பு சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் மேனாள் இணைப் பேராசிரியர் முனைவர் ச. கண்ணன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு “இந்தியாவில் வரலாற்றுக்கு முந்தைய கால தொல்லியல்: தமிழகத்தின் முக்கியத்துவம்” என்னும் தலைப்பில் உரையாற்றினார்.




- ✓ 31.07.2025 அன்று வரலாற்றுத் துறையில் “Freedom Curiosity to Science: The Evolution of Archaeology” என்ற தலைப்பில் விருந்தினர் வகுப்பு நடைபெற்றது. இந்நிகழ்வில் கீழடி அருங்காட்சியகத்தின் தொல்லியல் அதிகாரி திரு ர. அஜய் குமார் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு “தொல்லியல் துரையின் தோற்றம் மற்றும் வளர்ச்சி” என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

## முதுநிலை மற்றும் ஆராய்ச்சி வணிகவியல் துறை

- ✓ 01.07.2025 அன்று முதுநிலை மற்றும் ஆராய்ச்சி வணிகவியல் துறை “SPSS Decoded: From Basics to Advanced Data Interpretation” என்ற தலைப்பில் ஒரு பயிற்சி பட்டறையை நடத்தியது. இந்நிகழ்வில் மாணவர்கள் SPSS மென்பொருள் பயன்படுத்தி தரவு மேற்கொள்தல் மற்றும் பகுப்பாய்வு செய்யும் திறனை பெற்றனர்.
- ✓ 01.07.2025 அன்று முதுகலை மற்றும் ஆராய்ச்சி வணிகவியல் துறையில் ஏற்பாடு செய்த ஒருநாள் பயிற்சிப்பட்டறையில் கோயம்பத்தூர் ஆக்கம் குரூப்ஸ் ஏ ,ன்ஸ்டிடியூசனனின் நிறுவனர் திரு. எஸ். அழகுபாண்டி சிறப்பு விருந்தினராக் கலந்துகொண்டு “SPSS for Applied Marketing Research- A hands on Training” என்ற தலைப்பில் மூன்றாமாண்டு மற்றும் முதுகலை வணிகவியல் மாணவர்களுக்கு சிறப்பு வகுப்பெடுத்தார்.
- ✓ 04.07.2025 அன்று முதுகலை மற்றும் ஆராய்ச்சி வணிகவியல் துறையின் சார்பாக வணிகவியல் துறை மாணவர்களுக்கு முதலாவது திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் நமது கல்லூரியின் நூலகர் முனைவர். எம். பிரபாகரன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தார்.
- ✓ 11.07.2025 அன்று முதுநிலை மற்றும் ஆராய்ச்சி வணிகவியல் மற்றும் வணிகவியல் (கணினி பயன்பாடுகள்) துறைகள் இணைந்து “GST – An Overview” என்ற பயிற்சி பட்டறையினை நடத்தினர். இந்நிகழ்வில் மாணவர்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரி பற்றிய விளக்கமளிக்கப்பட்டது.



- ✓ 11.07.2025 அன்று முதுகலை மற்றும் ஆராய்ச்சி வணிகவியல் துறையின் சார்பாக வணிகவியல் துறை மாணவர்களுக்கு இரண்டாவது திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் நமது கல்லூரியின் முன்னாள் மாணவர் திரு. வி. செந்தில் வேலவன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தார்.
- ✓ 16.07.2025 முதல் 29.07.2025 வரை முதுகலை மற்றும் ஆராய்ச்சி வணிகவியல் துறையின் தலைவர் மற்றும் உதவி பேராசிரியர் முனைவர். கே. செல்லபாண்டியன் அவர்கள் பாரதியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இரண்டு வார Online Refresher Course கலந்து கொண்டு சிறப்பித்தார்

- 18.07.2025 அன்று முதுகலை மற்றும் ஆராய்ச்சி வணிகவியல் துறையின் சார்பாக வணிகவியல் துறை மாணவர்களுக்கு மூன்றாவது திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் நமது கல்லூரியின் முன்னாள் மாணவர் திரு. எல். தனபாலன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தார்.
- 18.07.2025 அன்று முதுகலை மற்றும் ஆராய்ச்சி வணிகவியல் துறையில் ஏற்பாடு செய்த ஒருநாள் சிறப்பு சொற்பொழிவில் நமது கல்லூரியின் முன்னாள் மாணவர் மற்றும் சென்னையில் உள்ள L&T நிறுவனத்தில் பணிபுரியக்கூடிய திரு. எல். தனபாலன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு "Digital Transformation in Industry: Role of ERP Systems" என்ற தலைப்பில் முதலாமாண்டு வணிகவியல் மாணவர்களுக்கு சிறப்பு வகுப்பெடுத்தார்.
- 18.07.2025 அன்று முதுநிலை மற்றும் ஆராய்ச்சி வணிகவியல் துறை "Career Guidance Programme in Education Technology" என்ற நிகழ்வை நடத்தியது. இந்நிகழ்வில் கல்லூரியின் வேதியியல் துறையின் பெருமைமிகு முன்னாள் மாணவர் (2016-2019) திரு. எம். அனி' சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவரகளுடன் கலந்துரையாடினார்.
- 25.07.2025 அன்று நமது கல்லூரியின் துணை முதல்வர் மற்றும் வணிகவியல் துறையின் உதவி பேராசிரியர் முனைவர் எஸ். சந்திரசேகரன் அவர்கள் கோயமுத்தூர்; PSG கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் "Exploring mHealth Apps: Adoption> Usage Pattern and Market Growth in The Digital Era" என்ற தலைப்பில் நடைபெற்ற ஆராய்ச்சி பட்டைய படிப்பிற்கான ஆராய்ச்சி கட்டுரை கட்டுரை சமர்ப்பித்தல் தேர்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.
- 26.07.2025 முதல் 27.07.2025 வரை தமிழ்நாடு உயர்கல்வி ஆசிரியர் சங்கம் மற்றும் சென்னையில் உள்ள VIT நிறுவனம் இணைந்து நடத்திய இரண்டு நாள் தேசிய கருத்தரங்கில் வணிகவியல் துறையின் உதவி பேராசிரியர் முனைவர். எஸ். வடிவேல் ராஜா மற்றும் 8 முதலாம் ஆண்டு முதுகலை வணிகவியல் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



- 30.07.2025 அன்று முதுநிலை மற்றும் ஆராய்ச்சி வணிகவியல் மற்றும் வணிகவியல் (கணினி பயன்பாடுகள்) துறைகள் ஏற்பாட்டில் CA, CMA and CS போன்ற தொழில்முறைப் படிப்புகள் பற்றி மாணவர்களுக்கு விழிப்புணர்வு வழங்க ஒரு நாள் நோக்குநிலை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், SICASA தலைவர்; CA ஆ. கார்த்திகேயன், CA சு. சரத் பாபு மற்றும் CS S. பரமசிவம், ICSI மதுரை, பொருளாளர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

## கணிதத்துறை

- 03.07.2025, 10.07.2025, 31.07.2025 ஆகிய தேதிகளில் கணிதத்துறையில் மாணவர்களின் "Math-E-Club" என்ற மாணவர் திறன்வளர் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்கள் வினாடி வினா மற்றும் பேப்பர் பிரசண்டேசன் போன்ற நிகழ்ச்சிகளை செய்துகாட்டினர்.




- 05.07.2025 அன்று கணிதத்துறையில் "Mathematics Behind the Semiconductor A Trillion Dollar Industry" என்ற தலைப்பில் விருந்தினர் வகுப்பு நிகழ்ச்சி நடைபெற்றது, இதில் கல்லூரியின் கணிதவியல் துறையின் முன்னாள் மாணவர் (2000-2003) மற்றும் சென்னைய கே.எல்.ஏ. நிறுவனத்தின் மென்பொறியாளர் திரு எஸ். கார்த்திகேயன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு கணிதத்துறை மாணவர்களுக்கு சிறப்பு வகுப்பு எடுத்தார்.
- 17.07.2025 அன்று கணிதத் துறையில் "A Journey into the Future of Generative AI" என்ற தலைப்பில் ஒரு சர்வதேச விருந்தினர் வகுப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் Generative AI-ன் எதிர்கால வாய்ப்புகள் பற்றி மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

## இயற்பியல் துறை

- ✓ 10.07.2025 அன்று இயற்பியல் துறை மாணவர்கள் கொடைகானல், இந்திய வானியற்பியல் நிலையத்திலுள்ள சூரிய வான் ஆய்வகத்திற்கு சென்று கள ஆய்வு மேற்கொண்டனர்.




## முதுநிலை மற்றும் ஆராய்ச்சி வேதியல்துறை




- ✓ 01.07.2025 அன்று முதுநிலை மற்றும் ஆராய்ச்சி வேதியியல் துறை மாணவர்கள் மதுரை, அய்யங்கோட்டியிலுள்ள எஸ்.என்.பி பால் நிறுவனத்திற்கு தொழில்துறை வருகை சென்று வந்தனர்.
- ✓ 10.07.2025 அன்று முதுநிலை மற்றும் ஆராய்ச்சி வேதியியல் துறை மாணவர்கள் திண்டுக்கல்லிலுள்ள நாகா உணவு நிறுவனத்திற்கு சென்று கள ஆய்வு மேற்கொண்டனர்.
- ✓ 22.07.2025 அன்று முதுநிலை மற்றும் ஆராய்ச்சி வேதியியல் துறை மாணவர்கள் திருச்சியிலுள்ள தேசிய தொழில்நுட்பக் கழகத்திற்கு நிறுவன வருகை சென்ரு வந்தனர்.






- ✓ 28.07.2025 அன்று முதுநிலை மற்றும் ஆராய்ச்சி வேதியியல் துறையும் முதுநிலை மற்றும் ஆராய்ச்சி விலங்கியல் துறையும் இணைந்து “Turning Challenges into Opportunities: Young Mindset for Success” என்ற தலைப்பில் ஏற்பாடு செய்த மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மேற்கு வங்காளம் மோகன்பூரிலுள்ள இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் பாலிமர் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் முனைவர் ராஜா சண்முகம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடினார்.
- ✓ 29.07.2025 அன்று முதுநிலை மற்றும் ஆராய்ச்சி வேதியியல் துறை “Chemistry at the Frontiers of Technology” என்ற தலைப்பில் ஏற்பாடு செய்த இணையவழி பன்னாட்டு விருந்தினர் வகுப்பு நடைபெற்றது. இதில் கல்லூரியின் வேதியியல் துறையின் பெருமைமிகு முன்னாள் மாணவர் (2015-2018 & 2018-2020) முனைவர் எம். சந்திரன் இணையவழியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

## தாவரவியல் துறை

- ✓ 05.07.2025 அன்று தாவாரவியல் துறை மாணவர்கள் கேரளா மாநிலம் மூணாரிலுள்ள தாவரங்களின் நிலையினை நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டு வந்தனர்.
- ✓ 10.07.2025 மற்றும் 17.07.2025 ஆகிய தேதிகளில் தாவரவியல் துறையில் மாணவர்களின் திறன்வளர் நிகழ்ச்சி “Verdue Meet” என்ற தலைப்பில் நடைபெற்றது. இதில் மாணவர்கள் தனித்திறன் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து தங்கள் திறன்களை வெளிப்படுத்தினர்.



- ✓ 29.07.2025 அன்று திண்டுக்கல் ஜி.டி.என் கல்லூரியின் தாவரவியல் துறை டி.பி.டி நட்சத்திரக் கல்லூரி நிதிநல்கையுடன் “Herbal Product Preparation” என்ற தலைப்பில் நடத்திய பயிற்சி நிகழ்ச்சியில் கல்லூரியின் தாவரவியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் டி. செல்லத்துரை வளநபராகக் கலந்துகொண்டு பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி அளித்தார்.

## முதுநிலை மற்றும் ஆராய்ச்சி விலங்கியல் துறை

- ✓ 05.07.2025 அன்று முதுநிலை மற்றும் ஆராய்ச்சி விலங்கியல் துறை Biology in the Lab and in Life From symptoms to solutions என்ற தலைப்பில் ஏற்பாடு செய்த விருந்தினர் வகுப்பு நிகழ்ச்சியில் கல்லூரியின் விலங்கியல் துறையின் முன்னாள் மாணவர் (2013-2016) மற்றும் அமெரிகாவிலுள்ள மாயோ கிளீனிக்கின் ஆராய்ச்சியாளர் முனைவர் அர்ச்சுதன் டேவிட் இணையவழியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடி ஊக்கப்படுத்தினார்.
- ✓ 07.07.2025 அன்று முதுகலை வேதியியல் மற்றும் விலங்கியல் ஆராய்ச்சித் துறை PMRF உடன் இணைந்து Driven by Passion-powered என்ற தலைப்பில் மாணவர் மேம்பாட்டுத் திட்டத்தை நடத்தினர். இதில் ஆந்திரப் பிரதேசம் திருப்பதியிலுள்ள IISER இன் பானர்ஜி ஆராய்ச்சிக் குழுவின் வேதியியல் துறை Ph.D ஆராய்ச்சி மாணவர் திரு. அபிஜித் நந்தி, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.
- ✓ 10.07.2025 அன்று மதுரை அமெரிக்கன் கல்லூரியில் இளங்கலை விலங்கியல் சங்கத்தின் தொடக்க விழாவில் விலங்கியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர். எம். பவுன்ராஜ் அன்று விருந்திராகக் கலந்துகொண்டார்.



- ✓ 18.07.2025 அன்று முதுநிலை மற்றும் ஆராய்ச்சி விலங்கியல் துறை “Bio-Track Meet” என்ற திறன் மேம்பாட்டு நிகழ்வை நடத்தியது. இந்நிகழ்வில் உயிரியல் ஆராய்ச்சி தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெற்றன.
- ✓ 21.07.2025 முதல் 26.07.2025 வரை இலங்கை மற்றும் குளோபிதிக்ஸ், தெற்காசிய மையம், பெங்களூரு ஆகியவற்றால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட உயர்கல்வியில் ஆராய்ச்சி நெறிமுறைகள் குறித்த சர்வதேச ஆசிரிய மேம்பாட்டுத் திட்ட நிகழ்ச்சியில் விலங்கியல்துறை தலைவர் மற்றும் உதவிப் பேராசிரியர் முனைவர் கே. ரமேஷ் குமார் கலந்து கொண்டார்.
- ✓ 21.07.2025 முதல் 26.07.2025 வரை இலங்கை மற்றும் குளோபிதிக்ஸ், தெற்காசிய மையம், பெங்களூரு ஆகியவற்றால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட உயர்கல்வியில் ஆராய்ச்சி நெறிமுறைகள் குறித்த சர்வதேச ஆசிரிய மேம்பாட்டுத் திட்ட நிகழ்ச்சியில் விலங்கியல்துறை உதவிப் பேராசிரியர் திரு டி. ஏ. கோகுல் கலந்து கொண்டார்.
- ✓ 25.07.2025 மற்றும் 26.07.2025 ஆகிய இருநாட்களில் விருதுநகர், V.H.N.S.N கல்லூரியின் விலங்கியல் துறையால், ஏற்பாடு செய்யப்பட்ட ஸ்பைருலினா பெருமளவில் வளர்ப்பது குறித்த இரண்டு நாள் மாநில அளவிலான பயிலரங்கில் திரு. வி. மதன், ஜே. பாலமுருகன், எஸ். ராம்குமார், கே. அபினேஷ், எஸ். பரசுராமன் மற்றும் டி. நிரஞ்சன், ஆகிய முதலாமண்டு முதுகலை விலங்கியல் மாணவர்கள் கலந்து கொண்டனர்.
- ✓ சென்னை வேலூர் தொழில்நுட்ப நிறுவனத்தில் (VIT) THETA ஏற்பாடு செய்த ”விக்சித் பாரதத்திற்கான சாலை வரைபடம் - ஒரு பல்துறை அணுகுமுறை” என்ற தலைப்பில் நடத்திய இரண்டு நாள் தேசிய அளவிலான மாநாட்டில் முனைவர் சு. முத்துப்பாண்டி கலந்து கொண்டார்.




- ✓ 28.07.2025 அன்று முதுநிலை மற்றும் ஆராய்ச்சி விலங்கியல் துறை Turning Challenges into Opportunities: Young Mindset for Success என்ற தலைப்பில் ஏற்பாடு செய்த மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கல்கத்தாவிலுள்ள ஐஐஎஸ்இஆர் இன் பாலிமர் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியன் முனைவர் ராஜா சண்முகம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடினார்.
- ✓ 29.07.2025 அன்று சென்னை லயோலா கல்லூரியின் மேம்பட்ட விலங்கியல் மற்றும் உயிரி தொழில்நுட்பத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச புலிகள் தின ஆன்லைன் வினாடி வினாவில் விலங்கியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ச.செல்வராஜ் பங்கேற்றார்.
- ✓ 24.07.2025 முதல் 31.07.2025 வரை அருள் ஆனந்தர் கல்லூரி மற்றும் கேரளாவின் ஏ.சி.டி அகாடமி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட ”பாடத்திட்டம் மற்றும்

ஆராய்ச்சியில் இந்திய அறிவு முறை ஒருங்கிணைப்பு: வாய்ப்புகள் மற்றும் சாத்தியக்கூறுகள்” என்ற தலைப்பில் நடத்திய ஏழு நாள் தேசிய அளவிலான FDP (ஆன்லைன்) இல் விலங்கியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் கே. காமாட்சி,கலந்து கொண்டார்.

- ✓ முனைவர் மா. பவுன்ராஜ் ”பல்லுயிர், பூச்சியியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலைகளை ஆராய்தல்” என்ற புத்தகத் தொகுப்பை வெளியிட்டு அதன் முதல் ஆசிரியராகச் செயல்பட்டுள்ளார். வெளியிட்டவர்: அருத்ரா பப்ளிகேஷன்ஸ், சென்னை-600 001, முதல் பதிப்பு: 2025, ISBN: 978-81-985002-5-0.
- ✓ 31.07.2025 முதுகலை மற்றும் விலங்கியல் ஆராய்ச்சித் துறை மாணவர்கள் கன்னியாகுமரி சுற்றுப்பகுதிகளுக்கு ஒரு நாள் கல்விச் சுற்றுலா சென்று வந்தனர். இதில் 51 இளங்கலை மாணவர்களும், 9 முதுகலை மாணவர்களும் கலந்து கொண்டனர். அவர்களுடன் 8 ஆசிரியர்களும், 2 ஆசிரியர் அல்லாத ஊழியர்களும் சென்றனர்.

## கணினி அறிவியல் துறை

- ✓ 03.07.2025 அன்று கணினி அறிவியல் துறையில் “Rooted in Values, Rising in Tech” என்ற திறன் மேம்பாட்டு நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அமெரிக்காவில் பணிபுரிந்து வரும் கல்லூரியின் முன்னாள் (2002-2004) மாணவர் திரு ஜி. வினோத் குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு கணினி அறிவியல் துறை மாணவர்களுடன் தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் மனிதநேய மதிப்புகளின் அவசியம் பற்றி கலந்துரையாடினார். மேலும் அவர் கல்லூரியின் மாலை நேர பிரார்த்தனைக்கு பின்பு மாணவர்களுக்கு கல்வி மற்றும் வாழ்க்கை நோக்கங்களை அடையவதற்க்கான ஊக்கவுரையாற்றினார்.
- ✓ 08.07.2025. 15.07.2025 அன்று கணினி அறிவியல் துறை மாணவர்களின் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது
- ✓ 16.07.2025 அன்று கணினி அறிவியல் துறை மாணவர்கள் கேரளாவிலுள்ள கண்ணன் தேவன் தேயிலை தொழிற்சாலைக்கு தொழில்துறை வருகை அழைத்து செல்லப்பட்டனர்.



- ✓ 29.07.2025 அன்று கணினி அறிவியல் துறை ஏற்பாடு சிறப்பு விருந்தினர் வகுப்பு நிகழ்ச்சியில் திண்டுக்கல் ஜி.டி.என் கல்லூரியின் தகவல் தொழில்நுட்பத் துறை பேராசிரியர்கள் பதிருமதி எஸ் விஜயலட்சுமி னுயவய ளுஉநைஉெந ரளைபெ ீலவாழஉ என்ற தலைப்பிலும் திருமதி பி. ஆர்த்தி அவர்கள் AI & Generative AI என்ற தலைப்பிலும் மாணவர்களுடன் கலந்துரையாடினர்.



- ✓ 31.07.2025 அன்று கணினி அறிவியல் துறை “Career Opportunities for Computer Science Students” என்ற தலைப்பில் ஏற்பாடு செய்த முன்னாள் மாணவர் சிறப்பு விருந்தினர் வகுப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரியின் பெருமைமிகு முன்னாள் மாணவர் (கணினி அறிவியல் 2021-2024) கலந்துகொண்டு தங்கள் அனுபவங்களை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார் மேலும் கணினி அறிவியல் துறையில் நிலவும் வேலை வாய்ப்புகளை பற்றி கூறி ஊக்கமளித்தார்.



## வணிகவியல் (கணினி பயன்பாடுகள்) துறை

- ✓ 05.07.2025, 11.07.2025 மற்றும் 18.07.2025 ஆகிய தேதிகளில்வணிகவியல் (கணினி பயன்பாடுகள்) துறையில் மாணவர்களின் “Personality Development Programme” என்ற நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் தனித்திறன் நிகழ்ச்சிகள் வாராந்திர செய்தி அறிக்கை (ஆங்கிலம்), வணிக வினாடி வினா, நான் யார்?, கட்டுரை விளக்கக்காட்சி, புத்தக வாசிப்பு, திறன் மேம்பாட்டுத் திட்டம் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.
- ✓ 07.07.2025 அன்று வணிகவியல் (கணினி பயன்பாடுகள்) துறையின் சார்பில் ”இளம் முதலீட்டாளர்களை மேம்படுத்துதல்” என்ற தலைப்பில் மாணவர்களுக்கான சர்வதேச விருந்தினர் சொற்பொழிவு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்த சொற்பொழிவை எத்தியோப்பியாவில் உள்ள வணிகம் மற்றும் பொருளாதாரம் மேலாண்மைக் கல்லூரியின் இணைப் பேராசிரியர் டாக்டர் கார்த்திகா (SEBI SMARTs) வழங்கினார்.




- ✓ 11.07.2025 அன்று வணிகவியல் (கணினி பயன்பாடுகள்) துறையில் மாணவர்களின் “Personality Development Programme” என்ற நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் தனித்திறன் நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

## நூலகத்துறை

- ✓ 29.07.2025 அன்று கல்லூரியின் மைய நூலகம் ஏற்பாட்டில் நூலக எழுத்தறிவு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கல்லூரியின் முதலாமாண்டு மாணவர்கள் கலந்துகொண்டு போட்டி தேர்வு உலகத்தில் நூலகத்தின் பயன்பாடு குறித்து அறிந்துகொண்டனர்.




## அகத்தர உறுதிமையம்

- ✓ 09.07.2025 அன்று கல்லூரியின் ராகிங் எதிர்ப்புக் குழுக்கூட்டம் கல்லூரியின் முதல்வர் (பொ) முனைவர் கே. கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளை கல்லூரியின் அகத்தர உறுதி மையம் மேற்கொண்



- ✓ 22.07.2025 அன்று கல்லூரியின் அகத்தர உறுதி மையம் “Intellectual Property Rights in India – An Overview” என்ற தலைப்பில் ஒரு பேராசிரியர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியினை நடத் தியது. இந்நிகழ்வில் காப்புரிமை மற்றும் அறிவுசார் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

## போதை எதிர்ப்பு சங்கம்

- ✓ 28.07.2025 அன்று கல்லூரியின் போதை எதிர்ப்பு சங்கம; (Anti-Drug Club) மற்றும் மதுரை எம்.எஸ். செல்லமுத்து அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி மையம் இணைந்து "போதை ஒழிப்பு விழிப்புணர்வு – 2025" என்ற தலைப்பில் ஏற்பாடு செய்த சிறப்பு நிகழ்ச்சியில் மதுரை ம்.எஸ். செல்லமுத்து அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் திரு கே.எஸ்.பி. ஜனார்தன் பாபு அவர்களும் மதுரையிலுள்ள திரிசூல் மதுபோதை மறுவாழ்வு மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. கே. ராஜாங்கம் அவர்களும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு உரையாற்றினர்.



## விரிவாக்க செயல்பாடுகள்

- ✓ கல்லூரியின் சார்பாக கல்லூரியின் ,ளநிலை உதவியாளர் திரு பா.கார்த்திகேயா மதுரை தானம் அறக்கட்டளைகள் படிப்பு மைய மாணவர்களுக்கு (PDM 23 & PIM 02) ஜூலை மாதம் 08, 10, 15, 17, 24, 25, 29 மற்றும் 31 ஆகிய தேதிகளில் காலை 6 மணி முதல் 7 மணி வரை யோகா வகுப்புகள் எடுத்தார்.

**********

## மலர் குழுவினர்

| | |
|---|---|
| சுவாமி வேதானந்த | செயலர் |
| சுவாமி அத்யாத்மானந்த | குலபதி |
| முனைவர் கோ. கார்த்திகேயன் | பதிப்பாசிரியர் |
| முனைவர் சு. ஸ்ரீதர் சுவாமிநாதன் | அகத்தர உறுதி மைய ஒருங்கிணைப்பாளர் |
| முனைவர் க. அசோக் குமார் | குருகுலச் சுடர் ஒருங்கிணைப்பாளர் |
| முனைவர் சு. முத்தையா | மெய்ப்புத் திருத்துநர் |
| **ஆசிரியர் குழு** | |
| **பொறுப்பாசிரியர்/ ஒருங்கிணைப்பாளர்** | **துறை** |
| முனைவர் கோ. பாலமுருகன் | தமிழ்த் துறை |
| முனைவர் ச. பாரதிராஜா | ஆங்கிலத் துறை<br>குழு கலந்துரையாடல் மன்றம் |
| முனைவர் சு. ஸ்ரீரீதர் சுவாமிநாதன் | சமஸ்கிருதத் துறை<br>அகத்தர உறுதி மையம் |
| முனைவர் ம. அருள்மாறன் | பொருளியல் துறை<br>நுண்கலை மன்றம்<br>நாட்டு நலப்பணித் திட்டம், |
| திரு வீ. முருகன் | வரலாற்றுத் துறை<br>விவேகானந்த படிப்பகம்<br>இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் |
| முனைவர் மு. மோகன் | முதுகலை மற்றும் ஆராய்ச்சி வணிகவியல் துறை |
| முனைவர் ம. நாகராஜன் | கணிதத் துறை |
| முனைவர் ந. மீனாட்சி சுந்தரம் | இயற்பியல் துறை |
| முனைவர் த. திருப்பதி | முதுஅறிவியல் மற்றும் ஆராய்ச்சி வேதியியல் துறை |
| முனைவர் த. செல்லத்துரை | தாவரவியல் துறை |
| முனைவர் ச. செல்வராஜ் | முதுஅறிவியல் மற்றும் ஆராய்ச்சி விலங்கியல் துறை |
| திரு சு. முத்துகணேஷ் | கணினி அறிவியல் துறை |
| திரு ரா. கார்த்திகேயன் | கணினிப் பயன்பாட்டு வணிகவியல் துறை |
| முனைவர் ஜெ. நிரேந்தன் | விளையாட்டுத் துறை |
| முனைவர் மீ. பிரபாகரன் | நூலகத் துறை |
| முனைவர் பா. சேர்வாரமுத்து | DBT நட்சத்திரக் கல்லூரி திட்டம் |
| முனைவர் க. ராஜ்குமார் | SWAYAM |
| கேப்டன் வே. ராஜேந்திரன் | தேசிய மாணவர் படை |
| முனைவர் மு. கணபதி | செஞ்சுருள் சங்கம்<br>வாழ்க்கை வழிகாட்டி மையம்<br>வேலைவாய்ப்பு மையம் |
| முனைவர் க. செல்லப்பாண்டியன் | தொழில்முனைவோர் மையம்<br>ஆலோசனை மையம் |
| முனைவர் கு. ராமர் | பாரதி சிந்தனை அரங்கம் |
| முனைவர் சி. வடிவேல் | நுகர்வோர் சங்கம்,<br>உன்னத் பாரத் அபியான். |
| முனைவர் பா. மாரிமுத்து | கிராமத் தத்தெடுப்புத் திட்டம், |
| முனைவர் மா. பவுன்ராஜ் | புதுமை கண்டுபிடிப்பு மையம் |
| முனைவர் கா. ரமேஷ்குமார் | ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் |
| முனைவர் கா. காமாட்சி | கல்லூரியின் விரிவாக்கச் செயல்பாடுகள் |
| திரு நெ.சி. லக்ஷ்மிகாந்தன் | நரேன் ஐ.ஏ.எஸ் அகாடெமி<br>பொது அறிவு வகுப்பு |
| திரு பா. கார்த்திகேயா | வலை பதிவர் |
| திரு ரா. கார்த்திகேயன் | வலை பதிவர் |